பள்ளிகளும் இருக்கின்றன. மானியம் பெறுவதற்கு எந்தப் பள்ளிகள் விண்ணப்பித்தாலும் அவர்களுக்கு உடனடியாக அரசு மானியம் வழங்கி இந்தக் குழந்தைகளைக் காப்பாற்ற வேண்டும் என்று இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். ஆகவே, மானியம் பெறுவதற்கு எந்தப் பள்ளிகள் விண்ணப்பித்தாலும் உடனடியாக வழங்கி அந்தக் குழந்தைகளைக் காப்பாற்றும் பொறுப்பை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அரசு ஏற்றுக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 52, திரு. க. அர்ச்சுனன், இருக்கையில் இல்லை, அவருக்குப் பதிலாக திருமதி செ. சுந்தராம்பாள், மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

52—

மூடப்பட்டுள்ள நூற்பாலையைத் திறக்க நடவடிக்கை

**78600--திரு. க. அர்ச்சுனன்:*

மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா-

சேலம் மாவட்டம், மேட்டூரில் மூடப்பட்டுள்ள நூற்பாலையைத் திறக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திராகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திருமதி செ. சுந்தராம்பாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் இந்தக் கேள்வியைக் கேட்டிருந்தேன். மேட்டூர் நகரில் உள்ள மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் ஆலை கடந்த 11 ஆண்டு காலமாக மூடியிருக்கிறது. அங்கு பணிபுரிந்த 2561 தொழிலாளர்களின் குடும்பங்கள் மிகவும் வறுமையில் வாடிக்கொண்டிருக்கிறார்கள். மூடிய ஆலைகளை எல்லாம் திறந்து தமிழகத்திலே தொழில் புரட்சி செய்துவரும் தமிழகத்தின் நிரந்தர முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில், மாண்புமிகு அமைச்சர்

1995 நவம்பர் 8]

அவர்கள் மறுபரிசீலனை செய்து, இந்த ஆலையைத் திறப்பதற்கு ஆவன செயவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆலையைத் திறந்து இதில் பல்வேறு சலுகைகளை வழங்கவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டதற்கு இணங்க மின் வெட்டிலிருந்து இந்த ஆலைக்கு விலக்கு அளிக்கப்பட்டது; 3 ஆண்டுகளுக்கு விற்பனை வரி தள்ளி வைக்கப்பட்டது; வட்டியில்லா விற்பனை வரி கடனாக ரூபாய் 30 லட்சம் வழங்கியது; நலிந்த ஆலையாக இந்த ஆலை அறிவிக்கப்பட்டது. ஆனாலும்கூட ஆலையின் பங்குதாரர் உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கின் காரணமாக அதற்குச் சட்டப்படியான கலைப்பு அதிகாரியை நியமனம் செய்து 9–9–93 முதல் மேற்கண்ட அதிகாரி வசம் அந்த ஆலை ஒப்படைக்கப்பட்டு விட்டதால் இதில் அரசு தலையிட இயலவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 53,* திரு. ஆர். தங்கராஜ், இருக்கையில் இல்லை.

வினா எண் 54, திரு. அ. பாப்பா சுந்தரம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

54—

தலைமை ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு அளித்தல்

*9907–திரு. அ. ப்பாப்பா சுந்தரம்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நடுநிலைப்பள்ளி பட்டதாரி தலைமை ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வுக்கான வாய்ப்பு இல்லாததால், அவர்களுக்கு உதவிக் கல்வி அலுவலர் மற்றும் பள்ளித் துணை ஆய்வாளர் ஆகிய பதவிகளில் பதவி உயர்வு அளிக்க அரசு ஆவன செய்யுமா?

---

*உறுப்பினரின் வேண்டுகோளை ஏற்று மாண்புமிகு பேரவைத் தலைவர் இட்ட ஆணைக்கிணங்க இவ்வினா 10–11–95–ஆம் நாளைய வினாப்பட்டியலில் சேர்க்கப்பட்டுவிட்டதால் வினாக்கள்–விடைகள் பகுதி இறுதியில் இதற்குரிய வினா–விடைசேர்க்கப்படவில்லை.